


# மாணவர் கட்டுரை

(2016 – 2017)

# உழைப்பே உயர்வு

சற்று முன்புதான் இருட்டத் தொடங்கியிருந்தது. நான் எனது வீட்டுப் பாடங்களைச் செய்துகொண்டிருந்தேன். என்னுடைய அம்மா என்னுடைய தங்கைக்குக் கணக்குப் பாடத்தில் உதவி செய்துகொண்டிருந்தார். சிறிது நேரத்தில் என் அப்பா சிரித்த முகத்துடன் வீட்டிற்குள் நுழைந்தார். அப்போது அவர் சொன்ன செய்தி, நாங்கள் சற்றும் எதிர்பாராதது. அதை என்னால் இன்றும் நம்ப முடியவில்லை. அவர் சொன்னதைச் சொல்வதற்குமுன் முன்பு என்ன நடந்து என்பதைக் கூறுகிறேன். அவர் ஒரு வருடமாக வேலை இல்லாமல் இருந்தார். (அவர் வேலை செய்த இடத்திலிருந்து அவர் முதலாளி அவரைத் தூக்கிவிட்டார்.) அவர் அதிலிருந்து தெருத்தெருவாக வேலை தேடி அலைந்தார். என் அப்பா வேலைக்காகத் தேடாத இடமில்லை. அவர் வெளிநாட்டிற்குக்கூடச் சென்று வேலை தேடினார். எந்த வேலையும் கிடைக்கவில்லை.

அப்பா வேலைக்குச் செல்லாதிருந்தபோது என் அம்மா, நான், என் தங்கை என எல்லோரும் மிகவும் சிரமப்பட்டோம். என் அம்மாகூட வேலை தேடி அலைந்தார். ஆனால், அவருக்கு வேலை கிடைக்கவில்லை என்பதால் அவர் தேடுவதை நிறுத்திவிட்டு வீட்டில் இருந்தார்.

இதனால் எனக்கும் என் தங்கைக்கும் பள்ளிக் கட்டணம் கட்டுவதற்குப் பணம் இல்லை. அதனால் எங்களைப் பள்ளியிலிருந்து பள்ளி முதல்வர் நீக்கிவிட்டார். பிறகு என் வீட்டிலிருந்து வெகுதூரம் இருக்கும் இலவசப் பள்ளிக்கு என் பெற்றோர்கள் என்னையும், என் தங்கையையும் அனுப்பி வைத்தனர். அப்பள்ளி எங்களைப் போல் இருக்கும் வசதியற்ற மாணவர்களுக்கென நடத்தப்பட்டது. அங்கே இருக்கும் மாணவர்கள், ஆசிரியர்கள் என அனைவரும் எங்களிடம் அன்பாகவும் கனிவாகவும் நடந்துகொண்டார்கள். இதற்கிடையில் எங்கள் அப்பா கிடைக்கும் வேலையை ஏற்றுக்கொள்ளாமல் அவர் படிப்புக்கு ஏற்ற வேலையைத் தேடிக்கொண்டிருந்தார். இதனால் அவருக்கு மீண்டும் வேலை கிடைக்குமா என்ற சந்தேகம் எங்களுக்கு ஏற்பட்டது. எனினும் நானும் என் தங்கையும் அதையெல்லாம் பற்றிக் கவலைப்படாமல் படிப்பில் மிகச் சிறப்பாகச் செய்து வந்திருந்தோம்.

எங்கள் வாழ்க்கை இவ்வாறு சென்றுகொண்டிருந்தபோது மறுபடியும் ஒரு சம்பவம் நடந்தது. என் அப்பா தான் சேர்த்து வைத்திருந்த பணத்தை எல்லாம் செலவழித்து முடித்துவிட்டார். அவர் அதிகம் கடன் வாங்கியிருந்ததால் யாரும் அவர்க்குக் கடனும் கொடுக்கவில்லை. நாங்கள் சாப்பாட்டிற்குக் கூட அல்லல்பட்டோம். அப்போது இதை எல்லாம் அறிந்த என் அண்டைவீட்டுக்காரப் பெண்மணி தினமும் எங்களுக்கு மூன்று வேளையும் உணவு அளிக்க விரும்புவதாகக் கூறினார். அதைக் கேட்ட எங்கள் அம்மா என்ன பதில் கூறுவது என்று தெரியாமல் அவரைக் கட்டிப்பிடித்து அழுதார்.

இவ்வளவு துன்பங்களையும் சந்தித்த நாங்கள் இப்போது என் அப்பா சொன்ன செய்தியைக் கேட்டு மகிழ்ச்சியில் மூழ்கினோம். என் அப்பாவுக்கு நல்ல வேலை கிடைத்தது என்பதே அந்த நல்ல செய்தியாகும்.

**நூர் அமிரா**
**வழக்கநிலை**
**உயர்நிலை 1**

# நான் கழித்த என் பள்ளி விடுமுறை

"உன் உறவினருடன் நீ எவ்வாறு உன் பள்ளி விடுமுறையைக் கழித்தாய் மற்றும் அப்போது உனக்கு ஏற்பட்ட மறக்கமுடியாத அனுபவத்தையும் விளக்கி எழுத வேண்டும்." என்று ஆசிரியர் கூற பள்ளி மணி ஒலித்தது. "மறுபடியும் கட்டுரையா!" என்று நான் சலிப்படைந்தேன். திடீரென்று, என் யோசனைகள் முன்னோக்கிச் செல்வதற்குப் பதிலாக அவை பின்னோக்கிச் சென்றன. முன்னால் நடந்த சம்பவம் என் நினைவுக்கு வந்தது. அன்று……

எனக்கு அப்போது பள்ளி விடுமுறை. நான் மட்டில்லா மகிழ்ச்சி அடைந்தேன். அதற்குக் காரணம், என் மாமா இந்தியாவிலிருந்து சிங்கப்பூருக்கு வருவதே ஆகும். ஏனென்றால் என் மாமா சிங்கப்பூருக்கு வருவது இதுவே முதல்முறை என்பதால் அவரைச் சிங்கப்பூரில் எந்தெந்த இடங்களுக்கு அழைத்துச் செல்லலாம் என்பதை நான் முடிவு செய்தேன்.

என் மாமா வந்தவுடன், நானும் அவரும் செந்தோசாவுக்குச் சென்றோம். அவருக்கு அந்த இடத்திலுள்ள மீன்களைப் பார்த்து மலைத்துப் போனார் என்பதை என்னிடம் கூறினார். இரவு நேரமானது. நாங்கள் ஓர் உணவு அங்காடிக்குச் சென்றோம். என் மாமாவுக்குச் சிங்கப்பூரில் உள்ள உணவு நன்றாக இருக்குமா என்ற சந்தேகம் ஏற்பட்டது. அவர் 'கோழிச் சோறு' வாங்கினார். அவர் சாப்பிட்டதும் என்னிடம் "ம்…ம்;.. உணவு நன்றாக உள்ளது சிங்கப்பூரில் உணவு இவ்வளவு நன்றாக இருக்கும் என்று எதிர்பார்க்கவில்லை." என்று மகிழ்ச்சியுடன் கூறினார்.

இதைக்கேட்டதும் என் முகம் தாமரையைப் போல மலர்ந்தது. வயிறார உண்டபின் நாங்கள் வீட்டுக்குச் சென்றோம். நாங்கள் நடந்துசெல்லும் வழியில் எங்களுக்கு அழுகுரல் ஒன்று கேட்டது. நாங்கள் அழுகுரல் வந்த திசையை நோக்கிச் சென்றோம். அப்போது ஒரு வாலிபன் ஒரு பெண்மணியின் பையைப் பிடுங்கிக்கொண்டு ஓடுவதைக் கண்டோம். நாங்கள் இதைக்கண்டு அந்தத் திருடனைத் துரத்தினோம். ஆனால், அந்தத் திருடன் அசுர வேகத்தில் ஓடியதால் அவனைப் பிடிக்கச் சிரமமாக இருந்தது. திடீரென்று என் கண்ணில் ஒரு கல் தென்பட்டது. நான் அந்தக் கல்லை எடுத்து அந்தத் திருடனின் காலைக் குறி பார்த்து வீசினேன் அவன் 'படார்' என்ற சத்தத்துடன் கீழே விழுந்தான்.

மாமா உடனே அந்தத் திருடனைப் பிடித்தார். அந்தப் பெண்மணி காவலரிடம் தகவல் தெரிவித்தார். சிறிது நேரம் கழித்துக் காவலர்கள் திருடனைக் கைது செய்தார்கள். அந்தக் காவலர்கள் என்னிடம் "இந்தத் திருடன் நிறைய திருட்டுகளைச் செய்திருக்கிறான். ஆனால் எங்களால் அவனைப் பிடிக்க இயலவில்லை" என்றார்கள். மாமா என்னிடமுள்ள தைரியத்தையும் புத்திக்கூர்மையையும் எண்ணிப் பெருமை அடைந்தார். "பல நாள் திருடன், ஒரு நாள் அகப்படுவான்' என்பதற்கேற்ப அந்தத் திருடன் பல நாட்கள் திருடிக்கொண்டிருந்திருக்கிறான். ஆனால் அவனை இன்று நான் கையும் களவுமாகப் பிடித்து விட்டேன் என்பதை எண்ணி மனமகிழ்ச்சி அடைந்தேன்.

**செ. ஆனந்த்**
**வழக்கநிலை**
**உயர்நிலை 1**

# சுற்றுப்புறத் தூய்மை

நம் சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்வது அவசியம். சுற்றுப்புறம் மிகவும் அசுத்தமாக இருந்தால் அது நம்மைத்தான் பாதிக்கும். நம் சுற்றுப்புறத்தை நாம் எவ்வாறு மேம்படுத்தலாம் என்பதையும் அதன் அவசியத்தையும் இந்தக் கட்டுரையில் விளக்கப் போகிறேன்.

முதலில் நம்முடைய சுற்றுப்புறம் அசுத்தமாக இருந்தால் மக்களுக்கு நோய் ஏற்படலாம். குப்பைகள் நிறைந்து இருக்கும் சூழலில் நாம் வாழ்ந்தால் அது நிச்சயமாக நன்றாக இருக்காது. வகுப்பில் குப்பையாக இருந்தால் மாணவர்களால் படிப்பில் கவனம் செலுத்த முடியாது. அவர்களால் தாங்கள் விரும்பியபடி நன்றாகப் படிக்க முடியாது. அசுத்தமான வகுப்பறைச் சூழலில் படிக்கும்போது மாணவர்களுக்கு நோய் ஏற்படவும் வாய்ப்பு இருக்கிறது. எனவே வகுப்பறையை அவ்வாறு வைத்திருப்பது ஆரோக்கியமல்ல.

கட்டடத்தின் கீழ்த் தளத்தில் உட்கார எண்ணும்போது குப்பையாக இருந்தால் அங்கு உட்கார மக்களுக்குப் பிடிக்காது. அதுமட்டுமல்லாமல் மக்களுக்கென உருவாக்கப்பட்ட வசதிகள் பயன்படுத்தப்பட முடியாமல் போகும் நிலை ஏற்படும். இதனால் அத்தகைய இடங்களில் இட நெருக்கடி ஏற்படுவதோடு பலருக்கு இடைஞ்சலாகவும் இருக்கும் அதனால் தம் சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்வது முக்கியம். நாம் எங்கேயாவது குப்பையைப் பார்த்தால் அதை உடனே எடுத்து, அருகில் இருக்கும் குப்பைத் தொட்டிக்குள் வீச வேண்டும். எங்கிருந்தாலும் நாம் நம் நலத்திற்காகவும் மற்றவர்களின் நலத்திற்காகவும் சுற்றுப்புறத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்ள முயற்சி செய்ய வேண்டும்.

இவையே நாம் சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்வதன் அவசியம் ஆகும். இவ்வாறு நாம் சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக்கொண்டால் எல்லாருக்கும் வசதியாக இருக்கும். நோய் இல்லாமல் ஆரோக்கியமாகவும் வாழலாம். அதனால் நாம் சுற்றுப்புறத்தின் தூய்மையைக் கட்டிக்காப்பதில் அக்கறை காட்ட வேண்டும். அதைத் தூய்மையாக வைத்துக்கொள்வது நம் பொறுப்பு ஆகும்.

**சாதியா**
**விரைவு**
**உயர்நிலை 1**

# பள்ளி முகாம்

"அண்ணா, நான் என் பள்ளி ஏற்பாடு செய்துள்ள முகாமிற்குச் செல்லப் போகிறேன், இதுதான் என் வாழ்க்கையின் முதல் முகாமாகும். ஆனால், எனக்குக் கொஞ்சம் பயமாகவும் இருக்கிறது. ஏனென்றால் நான் இதுவரை அம்மா, அப்பாவைவிட்டு இவ்வளவு நாள் பிரிந்ததில்லை. நீங்கள் உங்களது அனுபவத்தை என்னுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்." என்று என் தம்பி என்னிடம் கேட்டான். அதனால் நான் என்னால் மறக்கமுடியாத நான் கலந்துகொண்ட முகாமைப் பற்றியும் அதிலிருந்து நான் பெற்ற அனுபவத்தையும் இடம்பெற்றிருந்த நடவடிக்கைகளைப் பற்றியும் விளக்க ஆரம்பித்தேன்.

இரண்டு வருடங்களுக்கு முன்பு..... சந்திரன் தன் கடமையைச் செய்துவிட்டுச் சூரியனுக்கு வழிவிட்டான். புற்களில் உள்ள பனித்துளிகள் காலை நேரத்துச் சூரிய ஒளியில் உருக ஆரம்பித்தபோது நான் படுக்கையைவிட்டு எழுந்தேன். அன்றுதான் நான் உயர்நிலைப் பள்ளிக்கு வந்தபிறகு கலந்துகொண்ட முதல் முகாமின் முதல் நாளாகும். அம்முகாம் மாணவர் சாரணர் படையில் உள்ளவர்களுக்காக நடத்தப்பட்டது. நான் மகிழ்ச்சியாக என் பள்ளிக்குச் சென்றேன். அங்கே நான் என் ஆசிரியரைப் பார்த்தேன். அவர் என்னை என் குழுவில் உள்ளவர்களோடு சேர்ந்து உட்காரச் சொன்னார்.

பிறகு, அவர் என்னை அந்தக் குழுவின் தலைவனாக நியமித்தார். அதனால் நான் உல்லாச வானில் சிறகடித்துப் பறந்தேன். ஆசிரியர் எங்களை வெறும் கட்டைகளையும் கயிற்றையும் கொண்டு ஒரு கோபுரத்தை உருவாக்கச் சொன்னார். அது எங்களுக்கு மிகவும் சவாலாக இருந்தது. நாங்கள் கட்டைகளையும் கயிறுகளையும் எடுத்துக்கொண்டு மைதானத்திற்குச் சென்றோம். அன்று, சூரியனுக்கு என்ன கோபமோ தெரியவில்லை. பூமியே அனலாகக் கொதித்துக்கொண்டிருந்தது. நாங்கள் அந்த வெயிலில் மும்முரமாக வேலை செய்துகொண்டிருந்ததால் வியர்வைத் துளிகள் முத்துக்களாக முகத்தின்மீது வழிந்தோடின. இப்படியாகப் பகற்பொழுது கழிந்து மாலை நேரம் வந்தது. அது ஒரு இனிமையான மாலையாக இருந்தது. பறவைகள் எல்லாம் ஒலியெழுப்பிக் கொண்டிருந்தன. பின்பு நாங்கள் இரவு உணவை உண்டோம். அவர்கள் தந்த உணவு என் அம்மா சமைக்கும் உணவைப்போல் சுவையாக இல்லை. ஏனென்றால் என் அம்மா சமைத்த உணவின் மணத்தை முகரும்போதே என் நாவில் எச்சில் ஊறும். இரவு உணவிற்குப் பிறகு தரையில் அமர்ந்தபடியே சில விளையாட்டுகளை விளையாடினோம். பின் ஒரு கூடாரத்தில் தூங்கினோம்.

மறுநாள், விடியற்காலையில் எழுந்து நாங்கள் உடற்பயிற்சி செய்தோம். பிறகு, நாங்கள் பள்ளியைவிட்டு வெளியே சென்றோம். நாங்கள் ஒரு தீயணைப்பு நிலையத்திற்குச் சென்றோம். அங்கே சென்று தீ விபத்து நேர்ந்தால் எப்படி அதைத் தடுப்பது என்பதுபற்றிக் கற்றுக்கொண்டோம். பின்பு முகாமிற்குத் திரும்பியதும் கோபுரத்தைக் கட்டி முடித்தோம். நான் அன்று இரவு முழுவதும் வானத்தை இமைகொட்டாமல் பார்த்தேன். மறுநாள் நாங்கள் வீட்டுக்குத் திரும்பினோம் என்று கூறியதைக் கேட்டதும் என் தம்பியின் முகத்தில் மலர்ச்சி ஏற்படுவதைக் கண்டேன்.

**சக்தி முரளிகிருஷ்ணா**
**விரைவு**
**உயர்நிலை 1**

# மாமாவின் சிங்கப்பூர்ப் பயணம்

"ரிங் ரிங்" என்று என் கடிகாரம் ஒலித்தது. நான் தூக்கக் கலக்கத்தோடு என் காலைக் கடன்களை முடித்தேன். பிறகு நான் என் காலை உணவை உண்பதற்குச் சமையல் அறைக்குச் சென்றேன். அங்கே நான் என் தாயார் சமைத்த உணவை உண்டேன். அது மிகவும் ருசியாக இருந்தது. அப்போது என் பெற்றோர், மாமா வெளிநாட்டிலிருந்து வருகிறார் என்று கூறினார்கள். நான் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தேன். நான் அவருக்காகக் காத்துக்கொண்டிருந்தேன். சில நிமிடங்களுக்குப் பிறகு நான் கணிணி விளையாட என் அறைக்குச் சென்றேன். மூன்று மணி நேரத்திற்குப் பிறகு என் தந்தை என் அறைக்கு வந்தார். அவர் சில தடங்கல் காரணமாக மாமாவின் விமானம் தாமதமாக வரும் என்று கூறினார். நான் கவலையில் ஒன்றும் கூறவில்லை. பத்து மணி நேரத்திற்குப் பிறகு என் மாமா என் வீட்டிற்கு வந்தார். நான் மகிழ்ச்சியாக இருந்தேன். அவருக்கு மிகவும் களைப்பாக இருந்தது. நாங்கள் உணவு உண்ணும்போது இந்த வாரம் நாம் எங்கெல்லாம் செல்லலாம், என்ன செய்யலாம் என்பன பற்றிப் பேசினோம். பிறகு எல்லாரும் தூங்கச் சென்றோம்.

அடுத்த நாள், நாங்கள் விலங்கியல் தோட்டத்திற்குச் சென்றோம். அங்கே நாங்கள் பல வகையான மிருகங்களைப் பார்த்தோம். மேலும், யானைகள் படைத்த நிகழ்ச்சியைப் பார்த்தோம். அது சிறப்பாக இருந்தது. ஏனென்றால், யானை செய்த செயல்கள் எனக்கு வியப்பை அளித்தன. எனக்கு மிகவும் பிடித்தமான மிருகம் குதிரை. ஏனென்றால் குதிரைகள் மின்னல் வேகத்தில் ஓடும். மேலும் அழகாக இருக்கும். ஆனால் என் மாமாவிற்கு மிகவும் பிடித்த மிருகம் சிங்கம். ஏனென்றால் சிங்கம் காட்டின் ராஜா. மேலும் அது அழகாக இருக்கும் என்று என் மாமா கூறினார். மூன்று மணி நேரத்திற்குப் பிறகு வீட்டிற்குத் திரும்பினோம்.

மறுநாளிலிருந்து மூன்று நாள்களுக்கு நாங்கள் பல கடைத்தொகுதிகளுக்குச் சென்றோம். அங்கே நிறைய பொருள்களை வாங்கினோம். என் மாமா எனக்கு ஒரு சட்டையை வாங்கிக் கொடுத்தார். நான் என் மாமாவுக்கு நன்றி கூறினேன். பிறகு நாங்கள் உணவுக்கடைக்குச் சென்று உணவு உண்டபின் வீட்டிற்குத் திரும்பினோம்.

அடுத்த நாள் நாங்கள் உறவினர்களைப் பார்க்கச் சென்றோம். நாங்கள் உறவினர்களோடு மகிழ்ச்சியுடன் கலந்துரையாடினோம். அதனால் அந்த ஐந்து மணி நேரமும் எனக்கு மறக்கமுடியாத அனுபவமாக இருந்தது.

மாமா இந்தியாவிற்குத் திரும்பும் நாள் வந்தது. எனக்கு மிகவும் கவலையாக இருந்தது. என் தந்தையும், நானும் என் மாமாவை விமான நிலையத்திற்கு அழைத்துச் சென்றோம். நாங்கள் அங்கே ஒரு கடையில் சாப்பிட்ட பிறகு என் மாமா எங்களிடமிருந்து விடைபெற்றார். நான் வெளியிலிருந்து சிலைபோல் நின்று என் மாமாவுக்குக் கைகாட்டினேன். பிறகு நானும், என் தந்தையும் வீட்டிற்குத் திரும்பினோம். வழியில் நான் மாமாவுடன் இருந்த நாட்களைப் பற்றி எண்ணி மகிழ்ந்தேன். உறவுகள் மகிழ்ச்சியை அளிக்கும் என்பதை அன்று நன்கு உணர்ந்தேன்.

**எஸ். கேசவன்**
**விரைவு**
**உயர்நிலை 1**

# மனித நேயம்

படார்! என்ற சத்தம் என் காதைப் பிளந்தது. அசந்து தூங்கிக்கொண்டிருந்த நான் படுக்கையிலிருந்து துள்ளி எழுந்தேன். அப்பொழுது, என் கண்முன்னே நின்றுகொண்டிருந்த எனது தாயாரின் சீற்றம் நிறைந்த முகத்தைக் கண்டேன். “நீ இன்னும் பள்ளிக்குக் கிளம்பவில்லையா? எவ்வளவு நேரமாக நான் சொல்லிக்கொண்டிருக்கிறேன்,” என்று காதே கிழிந்துபோகுமளவிற்குக் கத்தினார் அம்மா. உடனே நான் அலறியடித்துக்கொண்டு எழுந்தேன். பிறகு அவசர அவசரமாகப் பள்ளிக்குக் கிளம்பினேன். வீட்டு வாசலைத் தாண்டியதும் குறுக்குப் பாதை வழியாகச் சென்றால் விரைவாகப் பள்ளியை அடைந்துவிடலாம் என்று மனம் எண்ணியது. உடனே நான் சாலையிலிருந்து பிரிந்துசெல்லும் அந்தக் குறுக்குப் பாதையில் நடக்க ஆரம்பித்தேன். ஒரு புதரையொட்டி அமைந்திருக்கும் அந்தக் குறுக்குப் பாதையின்வழியாகச் செல்லும் பொழுது என்னை யாரோ பின்பக்கத்திலிருந்து தொடுவது போல் இருந்தது. என்னுடைய இதயம் ‘வெடவெட’ வென்று வேகமாகத் துடிக்க ஆரம்பித்தது. கண்ணிமைக்கும் நேரத்தில் கருப்பு முகமூடி அணிந்த ஆண் ஒருவர் என்னை வழி மறைத்தார். என்னை ஓங்கி முகத்தில் குத்தினார். நானும் அலறிக்கொண்டே கீழே விழுந்து விட்டேன்.

அந்த ஆடவர் என்னுடைய தங்கச் சங்கிலியைக் கழற்றிக்கொண்டு தப்பிக்கப் பார்த்தார். அப்போது, அவ்வழியாக ஓர் இளைஞன் தன்னுடைய நாயுடன் வந்துகொண்டிருந்தான். இந்தச் சம்பவத்தைப் பார்த்ததும் அவன் திருடனைப் பிடிக்குமாறு தன் நாய்க்குக் கட்டளை இட்டான். “ரோவர்! உடனே போய் அந்தத் திருடனைப் பிடி!” என்று அவனிட்ட கட்டளையைக் கேட்டவுடன், மின்னல் வேகத்தில் ஓடி அந்தத் திருடனின் காலைக் கௌவியது அவனுடைய நாய். பிறகு இளைஞன் காவலர்களைத் தொலைபேசியின் மூலம் தொடர்புகொண்டான். காவலர்கள் சம்பவம் நடந்த இடத்திற்கு வந்தார்கள். காவலர்கள் திருடனைப் பிடித்து அவர்களுடைய வாகனத்தில் ஏற்றினர். அதன் பிறகு, இளைஞன் என்மீது தண்ணீரைத் தெளித்து என்னை எழுப்பினான். பின்னர், நடந்தது எல்லாவற்றையும் பற்றி என்னிடம் விளக்கமாகக் கூறினான். மேலும் என்னுடைய தங்கச் சங்கிலியைத் திருடனிடமிருந்து கைப்பற்றியதாகக் கூறி என்னிடம் கொடுத்தான்.

காவலர்கள் என்னுடைய தாயாரைத் தொடர்பு கொண்டு நடந்ததைப் பற்றிக் கூறினர். அங்கு வந்த என் தாயாரின் முகம் வெளிறிப்போய் இருந்தது. நான் நடந்ததை என் அம்மாவிடம் கூறினேன். அதற்குப் பிறகே அம்மா சற்றுத் தெளிவாக இருந்தார். என் தாயாரும் நானும் அந்த இளைஞனுக்கு எங்களுடைய நன்றியைக் கூறினோம். பிறகு என் தாயார் அவருக்குச் சிறிது பணத்தை வெகுமதியாகக் கொடுத்தார். ஆனால் அந்த இளைஞன் வாங்க மறுத்துவிட்டு, “ஏன் பணம் தருகிறீர்கள், மனிதன் என்றால் உதவும் மனப்பான்மையும் மனிதநேயமும் கொண்டிருக்க வேண்டும்.” என்று கூறினான். இளைஞனின் உயர்ந்த மனத்தை எண்ணி என் தாயார் மகிழ்ச்சியடைந்தார். அந்தச் சம்பவத்திற்குப் பிறகு நானும் அந்த இளைஞனும் நகமும் சதையும் போல் நட்பை வளர்த்துக் கொண்டோம். இது என் மனத்தில் பசுமரத்தாணி போல் பதிந்த ஒரு சம்பவமாகும்.

**சமீரா**
**விரைவு**
**உயர்நிலை 1**

# என் கனவு

நான் எதிர்காலத்தில் மருத்துவராகப் பணி செய்ய விரும்புகிறேன். இந்த உலகத்தில் நிறைய மருத்துவமனைகள் இருக்கின்றன. அதேபோல் நிறைய மருத்துவர்களும் உள்ளனர். இந்தக் காலத்தில் நிறைய மக்கள் அவர்களின் உடல் நலத்தைச் சரியாகக் கவனித்துக்கொள்வதில்லை. உடல் நலத்தைச் சரியாகக் கவனிக்காததால் சளி, காய்ச்சல் போன்று பல நோய்கள் ஏற்படுகின்றன. அதற்குக் காரணம் மக்களில் பலர் தாம் வசிக்கும் வீடு, சமூகம் மற்றும் நாட்டைச் சுத்தமாகவும் பசுமையாகவும் வைத்துக்கொள்வதில்லை. இப்படிப்பட்ட காரணங்களால் நோய்கள் மக்கள் இடையே பரவுகின்றன. இச்சூழலில் மருத்துவமனையும் மருத்துவர்களும் இல்லையென்றால் நாட்டில் நிறைய உயிர் இழப்புகள் ஏற்படும். சமூகத்தில், நாட்டில், வீட்டில் உள்ள எல்லோரும் நம்முடைய உறவினர்கள். எனவே, அவர்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்தை நாம் எல்லோரும் பெற்றிருக்க வேண்டியது அவசியமாகும்.

நான் மருத்துவராகப் பணி செய்ய விரும்புவதற்கான காரணம் உலகத்தில் உள்ள அனைவருக்கும் உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணமேயாகும. உலக மக்களில் பலரும் புற்றுநோய், மனநோய், பக்கவாதம் போன்ற பலவிதமான நோய்களால் பாதிக்கப்படுகின்றனர். நான் ஒரு மருத்துவராகப் பணி செய்தால் உலக மக்களில் ஒரு சிலருக்காவது மருத்துவச் சேவை ஆற்றுவதன்மூலம் மன நிம்மதியைப் பெற முடியும்.

நான் மருத்துவராகப் பணிசெய்ய விரும்புவதற்கான இரண்டாவது காரணம் ஏழைகளுக்கு இலவசமாக மருத்துவச் சிகிச்சை கொடுக்க வேண்டும் என்பதேயாகும். மருத்துவச் சிகிச்சை இக்காலத்தில் அதிகப் பொருட்செலவு நிறைந்ததாக உள்ளது. பணவசதி இல்லாததால் அதிகளவிலான ஏழைகள் மருத்துவச் சிகிச்சை பெற முடியாமல் தவிக்கிறார்கள். நான் மருத்துவராகப் பணி செய்தால் இப்பிரச்சினையைத் தீர்க்க ஏழைகளுக்கு இலவசமாகச் சிகிச்சை கொடுப்பேன்.

மருத்துவராகப் பணி செய்ய விரும்பினால் மட்டும் போதாது. அதற்குக் கடினமாக உழைக்க வேண்டும். அதற்கு முதலில் எந்த நேரத்திலும் நான் ஓர் உயிரைக் காப்பாற்றத் தயாராக இருக்க வேண்டும். இது ஒரு சுலபமான வேலை கிடையாது. ஏனென்றால் ஓர் உயிரைக் காப்பாற்ற எவ்வளவு முயற்சி செய்தும் இறுதியில் முடியவில்லை என்றால் மனம் மிகவும் கவலைப்படும். அந்தக் கவலையினால் பயம் ஏற்படலாம். பயந்தால் மருத்துவராக இருப்பது கடினம். மேலும் நான் என் மனத்தை எப்பொழுதும் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள வேண்டும். எந்தவிதமான ஆபத்திலும், பிறருக்கு என்னால் முடிந்த உதவியைச் செய்ய வேண்டும்.

உலகத்தில் உள்ள பலருக்கும் உதவி செய்ய ஏற்ற பணி மருத்துவராக இருப்பது மட்டுமே என்பது என் கருத்து. பிறர் நலமுடன் வாழ நான் உதவ முடிந்தால் அதுவே எனக்கு நிம்மதியையும் மகிழ்ச்சியையும் பெற்றுத் தரும். பிறருக்கு உதவும்வண்ணம் உலகத்தில் பல பணிகள் உள்ளன. ஒரு பணியின் மூலமாகத்தான் உதவ வேண்டும் என்று எந்த அவசியமும் கிடையாது. காலமும், கடல் அலையும் யாருக்காகவும் காத்திருக்காது. உன்னால் முடிந்த உதவியைப் பிறருக்குச் செய்துகொண்டே இருக்க வேண்டும்.

**நூருல்**
**வழக்கநிலை**
**உயர்நிலை 2**

# ஆர்வமூட்டும் மொழி நடவடிக்கைகள்

பள்ளிகளில் நடைபெறும் நடவடிக்கைகள் நிச்சயமாக ஒரு மாணவனின் முன்னேற்றத்துக்குக் காரணமாயிருக்கின்றன. ஏனென்றால், மாணவர்கள் முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதற்காகத்தான் நடவடிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன. மிக முக்கியமாக, ஒரு மாணவன் கல்வியில் முன்னேறுவதற்கு அவன் தன்மேல் நம்பிக்கை வைத்திருக்க வேண்டும். அவனால் எந்தக் காரியத்தையும் செய்ய முடியும் என்ற நம்பிக்கை அவனுக்குத் தேவை.

பள்ளிகள் காலையில் புத்தகம் படிப்பதைக் கட்டாய நடவடிக்கையாகக் கொண்டுள்ளன. மாணவர்கள் தம்முடைய புத்தகங்களை எடுத்து வரலாம் அல்லது பள்ளியில் உள்ள புத்தகத்தைப் பயன்படுத்தலாம். இந்த நடவடிக்கையின்மூலம், மாணவர்களின் உச்சரிப்பு மேம்படும். அதுமட்டுமல்லாமல் அவர்களுடைய சொல்வளமும் கூடும்.

சில பள்ளிகள் மாணவர்களுக்காகப் பயனுள்ள விளையாட்டு நடவடிக்கைகளை ஏற்பாடு செய்கின்றன. பயனுள்ள விளையாட்டுகளில் "புதிர்" விளையாட்டும் ஒன்று. "புதிர்" விளையாட்டுகளை விளையாடுவதன் மூலம் நாம் ஒரு வேலையில் கூடுதல் கவனம் செலுத்தக் கற்றுக்கொள்வோம். நாம் படிக்கும் பாடத்தில் கவனம் செலுத்தினால்தான் பாடம் நம் மூளையில் நன்கு பதியும். இப்போது நிறைய மாணவர்கள தம் கவனத்தை இழக்கிறார்கள். அதனால், அவர்களுக்கு இந்த நடவடிக்கை மிக உதவியாகவும் பயனுள்ளதாகவும் இருக்கும்.

பள்ளியில் மாணவர்களுக்காகச் சொல்வதெழுதுதல் என்னும் நடவடிக்கைக்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. இந்த நடவடிக்கையின் மூலம் மாணவர்கள் சொற்களைத் தவறில்லாமல் எழுதக் கற்றுக்கொள்வார்கள். அதுமட்டுமல்லாமல் அவர்கள் நிறைய புதுச் சொற்களையும் கற்றுக்கொள்வார்கள். இப்பொழுதெல்லாம் மாணவர்கள் தம் கட்டுரையில் மதிப்பெண்கள் குறைவாகப்பெறுவதற்கான முக்கியக் காரணம் எழுத்துப்பிழை ஆகும். அதனால் இந்த நடவடிக்கை அவர்களின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.

எப்போதும் ஒரு மாணவன், 'என்னால் முடியும்' என்று நம்பிக்கையோடு செயல்பட வேண்டும். அவ்வாறு திகழ்ந்தால் எல்லா மாணவனும் முன்னேறலாம்.

**லரிஃபா**
**வழக்கநிலை**
**உயர்நிலை 2**

# தேசிய தினக் கொண்டாட்டம்

தேசிய தினத்தைக் கொண்டாட என் பள்ளி ஓட்டப்பந்தய விழா ஒன்றிற்கு ஏற்பாடு செய்திருந்தது. அந்த விழாவைப் பற்றிக் கேள்விப்பட்டதும் மாணவர்களுக்குக் கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை. எல்லோரும் மான்களைப்போல் அங்குமிங்கும் குதித்துக் கொண்டிருந்தார்கள். நானும், என் நண்பர்களும் விழாவில் கலந்துகொள்ள முடிவு செய்தோம். எல்லோரும் அந்த விழா நடைபெறும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டு இருந்தார்கள்.

அந்த நாளும் வந்தது. நான் 300 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் பங்கெடுக்க வாய்ப்புக் கிடைத்தது. நான் என் தோழிகளுடன் சேர்ந்து உடற்பயிற்சி செய்து கொண்டிருந்தேன். நான் கலந்துகொள்ளும் போட்டி தொடங்கும் நேரம் வந்தது. என் மனத்திற்குள் பதற்றம் குடிகொண்டிருந்தது. போட்டியில் ஓடும்போது தவறிக் கீழே விழுந்துவிடுவோமோ என்ற ஐயமும் போட்டியில் தோற்று விடுவோமோ என்ற பயமும் என்னை ஆட்டிப் படைத்தன. போட்டி தொடங்கியதும் நான் சற்றுத் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு ஓடத் தயாராக நின்றேன். என் வகுப்பு மாணவர்கள் எனக்காகக் கைதட்டி உற்சாகப்படுத்தினார்கள். ஆசிரியர் முறையாகப் போட்டியைத் துவக்கினார். நாங்கள் அனைவரும் குதிரைகள்போல் விரைந்து ஓடினோம். திடீரென்று நான் சந்தேகப்பட்டது போன்றே கால் இடறிக் கீழே விழுந்தேன். ஆனாலும் நான் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு எழுந்து ஓடத் தொடங்கினேன். எனக்கு மூன்றாவது பரிசு கிடைத்தது.

என்னுடைய தலைமையாசிரியர் புகழ்ந்து பேசினார். எனக்கு முதல் பரிசு கிடைக்கவில்லை என்ற வருத்தம் இருந்தாலும், நான் செய்த விடாமுயற்சியைக் கண்டு பெருமை அடைந்தேன். நான் ஓய்வு எடுத்துக்கொண்டிருந்தபோது என் தோழி என்னிடம் வந்து தோல்விதான் வெற்றியின் முதல் படி என்று சொன்னாள். நான் அவள் கூறியதைக் கேட்டதும் ஆறுதல் அடைந்தேன்.

**ருக்ஷனா**
**வழக்கநிலை**
**உயர்நிலை 2**

# நேரம் பொன் போன்றது

இன்றைய இளைஞர்களுக்கு ஓய்வு நேரம் கிடைப்பதே ஒரு பெரிய விஷயம். காலையில் சீக்கிரமாக எழுந்து, காலைக் கடன்களையெல்லாம் அறக்கப்பறக்க முடித்துவிட்டுப் பள்ளிக்குச் சென்று இணைப்பாட நடவடிக்கைக்குச் சென்று பின்னர் திரும்பவும் வீட்டுக்குச் சென்று வீட்டுப் பாடத்தையெல்லாம் முடித்து, சாப்பிட்டுத் தூங்குவதற்கே நேரம் சரியாக இருக்கும். நாம் தூங்கும் நேரம்தான் நாம் ஓய்வு எடுக்கும் நேரம். ஆனாலும் சில இளைஞர்கள் இதேபோல வாழ்ந்தும் தங்கள் நேரத்தைச் சரியாகப் பயன்படுத்தித் தங்கள் ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வழிகளில் கழிப்பார்கள்.

சில இளைஞர்கள் தங்கள் ஓய்வு நேரத்தில் வேலை செய்வார்கள். உணவகத்தில் காசாளராக இருப்பதுதான் நிறைய இளைஞர்களின் வேலை. இதுபோன்ற வேலைகள் இளைஞர்களின் பொறுமையையும் வளர்க்கும். (சில பேர்கள் என்ன உணவு வாங்க வேண்டும் என்று யோசிக்கவே நிறைய நேரம் எடுப்பார்கள்) இளைஞர்களுக்குப் பணத்தின் அருமையையும் சொல்லிக் கொடுக்கும். (இளைஞர்களின் கடின உழைப்புதான் பணத்தைப் பெற்றுத்தரும்) இவை போன்ற வேலைகள் அவர்களுக்குப் பல நன்மைகளைப் பெற்றுத்தரும்.

மற்ற இளைஞர்கள் தங்கள் ஓய்வு நேரத்தில் நடனம் அல்லது பாட்டு வகுப்புக்குச் சென்று அங்குத் தங்கள் நேரத்தை அவர்களுக்கு மிகவும் பிடித்த வழியில் கழிப்பார்கள். இந்த வழியில் நேரம் பயனுள்ளதாகவும் கழிக்கப்படும். இளைஞர்களும் புது விஷயங்களைக் கற்றுக்கொள்வார்கள்.

மற்ற இளைஞர்கள் தங்கள் ஓய்வு நேரத்தில் உடற்பயிற்சி செய்வார்கள் அல்லது விளையாட்டு விளையாடித் தங்கள் நேரத்தைக் கழிப்பார்கள். நீச்சல், கூடைப்பந்து, கால்பந்து விளையாடும் இளைஞர்களை அதிகம் பார்க்கமுடிகிறது. இதைப் போல விளையாட்டுகளில் நேரத்தைக் கழிக்கும்போது உடல் ஆரோக்கியமாக இருக்கும். மன உளைச்சலும் குறையும்.

சில இளைஞர்கள் தங்கள் ஓய்வு நேரத்தைச் சிறப்பாகப் பயன்படுத்துவார்கள். ஆனால் நிறைய இளைஞர்கள் ஓய்வின்போது தொலைக்காட்சியைப் பார்த்துக்கொண்டே கைத்தொலைபேசியைப் பயன்படுத்திக்கொண்டே நேரத்தைக் கழிப்பார்கள். இவ்வாறு செய்வதில் தவறு இல்லை, அதேசமயம் தங்கள் ஓய்வு நேரத்தை எப்படிப் பயனுள்ள வழியில் கழிக்க வேண்டும் என்பதை அவர்கள்தான் முடிவுசெய்ய வேண்டும்.

**ரீட்டா தேவி**
**விரைவு**
**உயர்நிலை 2**

# சுத்தம் சுகம் தரும்

'சுத்தம் சுகம் தரும்' என்னும் பழமொழி நம்முடைய சுற்றுப்புறத்தைத் தூய்மையாகவும் பசுமையாகவும் வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தையும் அதனால் ஏற்படும் நன்மைகளையும் பற்றி விளக்குகிறது. சுத்தமாகவும் பசுமையாகவும் இருக்கும் நாடு அழகாக இருப்பதோடு அது சுற்றுப்பயணிகளையும் ஈர்க்கும். சுத்தமான நாட்டில் உள்ள குடிமக்களுக்கு நோய்களால் ஏற்படும் பாதிப்பும் குறையும். இதுவே, ஒரு நாட்டைத் தூய்மையாகவும் பசுமையாகவும் வைத்துக்கொள்வதற்கான அடிப்படைக் காரணம் ஆகும். ஒரு நாட்டைச் சுத்தமாக வைத்துக் கொள்வதற்குப் பல வழிகள் உள்ளன. சிங்கப்பூரின் குடிமக்கள் அவ்வழிகளைப் பின்பற்றி வந்தால், எதிர்காலத்தில் நாட்டு மக்கள் இன்னும் ஆரோக்கியமாக இருப்பது நிச்சயம்.

சிங்கப்பூரில் கண்ட இடங்களில் குப்பையைத் தூக்கிப் போடக்கூடாது என்ற விதிமுறை இருக்கிறது. இதைப் பின்பற்றாமல் செயல்படுபவர்களுக்கு ஆயிரம் வெள்ளி வரை அபராதம் விதிக்கப்படும். ஆயினும் பலர் தெருவிலோ அல்லது பாதையிலோ குப்பையைத் தூக்கிப்போடுகிறார்கள். இவ்விதிமுறைக்கு மதிப்புக் கொடுத்து, அதைப் பற்றி நன்கு அறிந்து, அதைக் கடைப்பிடிப்பதற்குத் தீவிரமாக முயற்சி செய்தால், சிங்கப்பூர் இன்னும் தூய்மையான நாடாகத் திகழலாம்.

சிங்கப்பூரில் மறுபயனீட்டிற்கான குப்பைத் தொட்டிகள் வைக்கப்பட்டுள்ளன என்பது பல சிங்கப்பூரர்களுக்குத் தெரிந்த தகவல் ஆகும். ஆனாலும், நிறைய பேர் அவற்றைப் பயன்படுத்தாமல், சாதாரணக் குப்பைத் தொட்டிகளுக்குள் குப்பைகளைப் போடுகிறார்கள். மரங்களிலிருந்தே காகிதம் தயாரிக்கப்படுகிறது. அதேசமயம் மரக் குப்பைகள் முறையாக அதற்குரிய தொட்டிகளில் வீசப்பட்டால் மறுமயனீட்டு முறையில் அவற்றிலிருந்து காகிதம் தயாரிக்கலாம். ஆதலால் நம்முடைய சுற்றுப்புறத்தில் உள்ள காடுகளில் மரங்களின் எண்ணிக்கையைக் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுத்துச் செயல்பட வேண்டும். இதன் அவசியத்தை உணர்ந்துகொள்ளும் மக்கள் தங்களுடைய பொருட்களை மறுபயனீடு செய்தால், நம்முடைய நாடு இன்னும் பசுமையாக விளங்குவதற்கு வாய்ப்பு உண்டு.

செடி, கொடிகளும் மரங்களும்தான் நம் நாடு பசுமையாக இருப்பதற்கு உதவுகின்றன. மேலும், வாழ்வதற்கான இன்றியமையாத பிராணவாயுவை அவற்றிலிருந்துதான் பெறுகிறோம். அரசாங்கம்தான் நம் நாட்டில் மரங்களையும், செடிகளையும் வளர்க்க வேண்டும் என்று எண்ணாமல் குடிமக்கள் தங்களுடைய வீடுகளுக்குள்ளேயே சிறிய அளவிலான செடிகளை வளர்க்கலாம். இப்படிச் செய்வதன் மூலமாக அவர்களுடைய வீடுகளையும் அலங்கரிக்க முடியும். மேலும், நம்முடைய நாடும் இன்னும் பசுமையாகவும் இருக்கும். ஒவ்வொரு ஆண்டும், நவம்பர் மாதத்தில், "மரம் வளர்க்கும் நாள்" என்னும் நிகழ்ச்சி நடைபெறும். இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, தங்களுடைய வீடுகளிலும் ஒரு புதிய செடியை வளர்த்தால், அவர்களும் நம்முடைய நாடும் நிறைய பயன்களைப் பெற இயலும்.

நம் நாட்டைத் தூய்மையாகவும் பசுமையாகவும் வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தைத் தெரிந்திருந்தால், சிங்கப்பூரர்கள் தங்களுடைய நாட்டைச் சுத்தமாக வைத்துக்கொள்வதற்கு, இன்னும் முயற்சி எடுப்பார்கள் என்பது என்னுடைய கருத்து. சுற்றுப்பயணிகள் பலர் சிங்கப்பூருக்கு வருவதனால் நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சி மேம்படுகிறது. சிங்கப்பூர் சுத்தமாகவும் பசுமையாகவும் இருப்பதைக் கண்டுதான் இங்கே

வர ஆசைப்படுகிறார்கள். சிங்கப்பூர் சுத்தமான நாடாக இல்லாமல் இருந்தால், நிறைய சுற்றுப்பயணிகள் இங்கே வரமாட்டார்கள். இதனால், சிங்கப்பூரின் வருமானம் குறைந்துவிடுவதோடு குடிமக்கள் பெறமுடிகிற வசதிகளும் குறைந்துவிடும்.

அடுத்ததாக, சுத்தமாகவும் பசுமையாகவும் இருக்கும் நாட்டில் நோயைப் பரப்பும் கிருமிகள் வளரும் வாய்ப்பும் குறைவாக இருக்கும். இதனால், அந்நாட்டின் குடிமக்கள் நோய்களால் பாதிக்கப்படக்கூடிய வாய்ப்பும் குறைவாகிவிடும். இதனால், மக்களின் ஆரோக்கியமும் கூடும்.

ஒரு நாட்டைச் சுத்தமாகவும் பசுமையாகவும் வைத்துக்கொள்வது மிகவும் எளிது. ஆனாலும், பலர் தங்களுடைய சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்வதற்கு எந்தவொரு முயற்சியும் எடுக்காமல் இருக்கிறார்கள். குடிமக்கள் தங்களுடைய நாட்டைத் தூய்மையாகவும் பசுமையாகவும் வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தைத் தெரிந்திருந்தால், நிச்சயமாகச் “சுத்தம் சோறு போடும்” என்ற பழமொழியின் பொருளை அறிந்து செயல்படுவார்கள் என்பது என்னுடைய நம்பிக்கை.

**அமீரா ஃபாத்திமா**
**விரைவு**
**உயர்நிலை 2**

# செல்லப் பிராணி

உலகில் பத்து விழுக்காட்டு மக்களைத் தவிர்த்துத் தொண்ணூறு விழுக்காடு மக்களுக்குச் செல்லப் பிராணி என்றால் உயிர். நானும் அந்தத் தொண்ணூறு சதவீத மக்களில் ஒரு பெண். செல்லப் பிராணி என்றால் எனக்கும் உயிர்தான். எனக்கு எல்லா பிராணிகளையும் பிடிக்கும். ஆனால், எனக்கு மற்ற செல்லப் பிராணிகளைவிட நாய்க்குட்டிகளையே அதிகமாகப் பிடிக்கும். அதுவும் உலகில் பலரும் தங்கள் வீடுகளில் நாய்க்குட்டிகளைத்தான் செல்லப் பிராணியாக வளர்க்கிறார்கள். எனக்குச் சிறிய வயதிலிருந்தே நாய்க்குட்டிகளின் மீது ஒரு தனி அன்பு இருக்கும். நான் சின்னப் பெண்ணாக இருக்கும்போது ஒரு செல்லப் பிராணி வேண்டும் என்று பெற்றோர்களிடம் கேட்டிருந்தேன். அவர்கள் நாயக்குட்டிகளைப் பார்த்துக் கொள்வது கடினம் என்றுகூறி என் ஆசைக்கு இணங்க மறுத்துவிட்டனர். ஆனால், எனக்கு மறுபடியும் செல்லப் பிராணியை வளர்க்க வாய்ப்புக் கிடைத்தால் நான் கண்டிப்பாக நாய்க்குட்டியை வளர்ப்பேன்.

நாய்க்குட்டிகளை வைத்துக்கொள்வதும் நமக்கு ஒரு பாதுகாப்புதான். வேறு யாரோ என் குடும்பத்தில் இல்லாத ஒருவரோ என் வீட்டில் நுழைந்துவிட்டார் என்றால் நாய்க்குட்டி குரைக்க ஆரம்பிக்கும். அதைக் கொண்டு யாரோ ஒருவர் உள்ளே வருகிறார் என்று தெரிந்துகொள்ளலாம். அந்த ஒருவர் ஒரு திருடனாகக்கூட இருக்கலாம். நாம் ஒரு நாய்க் குட்டியை நம்முடன் வெளியே கூட்டிச்செல்லும் போது ஏதேனும் ஆபத்து ஏற்பட்டால் அது நமக்கு உதவும் அப்போது என் வளர்ப்பு நாய்க்குட்டி என்னைக் காப்பாற்ற முயற்சி செய்யும். அது தன் கூரிய பற்களை வைத்து அந்த ஆடவரைக் கடிக்கும் மற்றும் அது குரைத்து ஊரையே கூப்பிடும். மேலும் நாய்க் குட்டி ஒருவரிடம் நெருக்கமாகப் பழகிவிட்டால் அது அவர்களிடம் அதிகளவு பாசத்தைக் காட்டும். உதாரணத்திற்கு, என் பாட்டி வீட்டிலிருந்த ஒரு நாய்க்குட்டி என் பாட்டியிடம் நெருக்கமாக இருக்கும். என் பாட்டி ஒரு சில நாட்களாக வீட்டில் இல்லாதபோது என் மாமாதான் அந்த நாய்க்குட்டியைப் பார்த்துக்கொண்டார். முன்பெல்லாம் என் பாட்டி அதற்கு உணவு வைத்தால்தான் அது சாப்பிடும். கடந்த மூன்று நாட்களாக என் பாட்டி வீட்டில் இல்லாததால் என் மாமா அதற்கு உணவு வைத்தார். ஆனால் அது சாப்பிடவே இல்லை.

அதனால் என் பாட்டி ஊருக்குச் சீக்கிரம் திரும்பினார். நாய்க்குட்டி என் பாட்டியைப் பார்த்ததும் அதற்கு அளவில்லாத மகிழ்ச்சி. உடனே என் பாட்டியின் சேலையைக் கவ்விக்கொண்டது. பின் அந்த நாய்க்குட்டி என் பாட்டி உணவு வைத்தவுடனே சட்டென்று சாப்பிடத் தொடங்கியது. எனக்கு, பாசமாகப் பழகும் செல்லப் பிராணிதான் மிகவும் பிடிக்கும். நாய்க்குட்டிகளை வளர்ப்பது மிகவும் சுலபம் என்பதையும் அறிந்துகொண்டேன். ஆரம்பத்தில் அது கடினமாகத்தான் இருக்கும். ஆனால் நாம் அந்த நாய்க்குட்டிக்குப் பயிற்சி கொடுக்கக் கொடுக்க நாய்க்குட்டியும் நம்மைப் புரிந்துகொண்டு நடந்துகொள்ளும். ஆரம்பத்தில் நாய்க்குட்டிகளுக்கு நம்மைப் பற்றித் தெரியாது. அதனால் அது நாம் சொல்லும் பேச்சைச் சுலபத்தில் கேட்காது. ஆனால் போகப் போக அது நம்மைத் தெரிந்துகொண்டு நாம் சொன்ன பேச்சைக் கேட்கும். இதனால்தான் நாய்க்குட்டிகளை வளர்ப்பது சுலபம்.

எனக்கு ஒரு நாய்க்குட்டிச் செல்லப் பிராணியாகக் கிடைத்தால் நான் அதை அன்புடனும், பண்புடனும் பாசத்துடனும் மரியாதையுடனும் நடத்துவேன். நான் அதை என்

வீட்டில் ஒரு ஆளாக நினைத்து அதைப் பார்த்துக்கொள்வேன் மற்றும் நான் அதைத் தினமும் வெளியே அழைத்துச் சென்று அதனுடன் விளையாடுவதற்குச் சிறிது நேரம் ஒதுக்குவேன். மற்றும் நான் இவற்றைப் போன்று பல நடவடிக்கைகளை அதற்காகச் செய்வேன். நான் அதை மாதாமாதம் மருத்துவரிடம் அழைத்துச் சென்று காட்டுவேன்.

எனக்கு ஒரு நாய்க்குட்டிச் செல்லப் பிராணியாகக் கிடைத்தால் நான் மிகவும் சந்தோஷமாக இருப்பேன் மற்றும் நான் அந்தச் செல்லப் பிராணியை நன்றாகக் கவனித்துக்கொள்வேன். நான் அதன்மீது வைத்திருக்கும் பாசத்திற்கு அளவே இருக்காது.

**நாகலட்சுமி**
**விரைவு**
**உயர்நிலை 2**

# கல்விச் சுற்றுலா

இக்காலத்தில் நிறையப் பள்ளிகள் மாணவர்களுக்காகக் கல்விச்சுற்றுலா போன்ற பல நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்கின்றன. பொதுவாக, இவ்வாறான நடவடிக்கைகள், இளைஞர்கள் நற்பண்புகளை வளர்த்துக்கொள்ளவும் பல புதிய அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளவும் நல்ல வாய்ப்பாக அமைகின்றன. நானும் நிறைய கல்வி தொடர்பான சுற்றுலாக்களுக்குச் சென்றுள்ளேன். ஆனால், என்னால் மறக்க முடியாத ஒரு கல்விச் சுற்றுலாப் பயணம் என்றால், நான் என் இணைப்பாட நடவடிக்கையில் உள்ளவர்களுடன் சென்றதே ஆகும். அந்தச் சுற்றுலாவில் எனக்கு ஏற்பட்ட அனுபவங்களையும் நன்மைகளையும் பற்றி எழுதுவதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

நானும் என் இணைப்பாட நடவடிக்கையில் உள்ள குழுவினர்களும், மூன்று நாட்களுக்கு மலேசியாவுக்குச் சென்றோம். முதல் நாளும் கடைசி நாளும் நாங்கள் மலேசியாவைச் சுற்றிப் பார்த்தோம். இரண்டாவது நாள் நாங்கள் மலேசியாவில் உள்ள ஒரு பள்ளிக்குச் சென்றோம். அந்தப் பள்ளியில் உள்ள மாணவர்கள் முதலில் எங்களைப் புன்னகை பூத்த முகத்துடன் வரவேற்றனர். அந்தப் பள்ளி மாணவர்களுடன் உரையாடிக்கொண்டிருந்தோம். அவர்கள் பேசியவிதம் என்னை வியக்க வைத்தது. அவர்கள் எங்களை 'அக்கா' என்று அன்புடன் கூப்பிட்டார்கள். அதுமட்டுமல்ல, அவர்கள் கனிவுடன் பேசினார்கள்.

பிறகு, அவர்கள் அவர்களுடைய பள்ளியைச் சுற்றிக் காட்டினார்கள். முதலில், நாங்கள் வகுப்பறைக்குச் சென்றோம். வகுப்பறையைப் பார்ப்பதற்கு நான் மிகவும் ஆவலாக இருந்தேன். ஆனால், எனக்கு ஓர் அதிர்ச்சி காத்துக்கொண்டிருந்தது. வகுப்பறையில் இருந்த நாற்காலிகளும் மேசைகளும் தூசிபடிந்து இருந்தன. அங்கே கணினி, மின்சாரம், குளிர்சாதனம் போன்ற எந்த வசதியும் இல்லை. அதைக் கண்டவுடன் நான் திகைத்துப்போய் நின்றேன். அப்பொழுதுதான், நான் என் வீட்டிலும் பள்ளியிலும் உள்ள அனைத்து வசதிகளையும் பற்றி எண்ணிப் பார்த்ததோடி நான் அவற்றை முறையாகப் பயன்படுத்தாமல் இருந்ததையும் நன்கு உணர்ந்தேன். அப்போதே, நான் மின்சாரத்தைச் சேமிக்க வேண்டும் என்று என் மனத்தில் உறுதி எடுத்துக்கொண்டேன்.

அதன் பின்னர், நாங்கள் பள்ளிக்கூடத்திற்கு விரைந்து சென்றோம். சிங்கப்பூரில் உள்ள எங்களின் பள்ளியைப் பற்றிப் பேச வேண்டிய பொறுப்பு எனக்கு அளிக்கப்பட்டிருந்தது. நான் மிகவும் கூச்ச சுபாவம் உடையவனாக இருந்ததால், நான் முதலில் பேசக் கொஞ்சம் தயங்கினேன். ஆனால், போகப்போக என்னால் என் பயத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு சுலபமாகப் பேச முடிந்தது.

இந்தக் கல்விச் சுற்றுலாப் பயணத்தில் நான் பல புதிய அனுபவங்களையும் நல்ல பண்புகளையும் கற்றுக்கொண்டேன். இவை நான் என் வாழ்க்கையில் வெற்றி பெற மிகவும் பயனள்ளவையாக இருக்கும். ஆகையால், இக்காலத்து இளைஞர்கள் வாழ்க்கையைத் தொலைபேசியில் நடத்துவதைத் தவிர்த்து நடைமுறை வாழ்க்கையில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்று உணர்ந்து நடக்கும்போது நம்நாடு தொடர்ந்து முன்னேறும்.

**விசாலாட்சி**
**விரைவு**
**உயர்நிலை 2**

# அண்டை வீட்டார் நட்பு

அண்டை வீட்டாருடன் இணக்கமாக வாழ்வது மிகவும் அவசியம். அவர்கள் நம் வாழ்க்கையில் முக்கியமான பங்கு வகிக்கிறார்கள் என்பதை நாம் புரிந்துகொண்டு நடக்க வேண்டும்.

முதலில் அவர்களை நன்கு உபசரிக்க வேண்டும். நாம் அவர்களுடன் ஒரு நல்ல தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் அவர்களுக்கு நம்மீது நம்பிக்கை வரும். மேலும் அந்தத் தொடர்பும் ஒரு நல்ல நட்பாக மாறும். அவர்களுக்கு நம்மால் முடிந்த உதவிகளைச் செய்ய வேண்டும். பண்டிகைக் காலங்களின்போது நாம் சமைத்த ருசியான உணவை அவர்களுடன் பகிர்ந்துகொள்ளலாம். இப்படி உங்கள் அண்டை வீட்டாருடன் இணக்கமாக வாழ நிறைய வழிகள் உள்ளன.

நாம் எப்பொழுதுமே அண்டை வீட்டாரை எதிரியைப் பார்ப்பதுபோல் பார்க்கக்கூடாது. இதனால் நிறைய பிரச்சினைகள் ஏற்படலாம். நமக்கு நம் அண்டை வீட்டாரின் உதவி எப்படியாவது தேவைப்படும். அப்போது அவர்கள் உதவி செய்ய மறுத்தால் நாம் யாரிடமும் உதவி கேட்க முடியாது. அதனால் நாம் எப்பொழுதுமே அண்டை வீட்டாருடன் நன்றாக நடந்துகொள்ள வேண்டும்.

நாம் வெளியூருக்குச் சென்றுவிட்டால், நம் வீட்டை அண்டை வீட்டார் கவனமாகப் பார்த்துக்கொள்ள முடியும். திருடன் வீட்டுக்குள் நுழைந்துவிடாமல் கவனிப்பது, நம் பூச்செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றுவது போன்ற உதவிகளை நம் அண்டை வீட்டார் நமக்காகச் செய்வார்கள். மேலும் நமக்கு உடல் நலக் குறைவு ஏற்படும்போது நமக்கு வேண்டிய உணவைக் கடையிலிருந்து வாங்கியோ சமைத்தோ கொடுப்பார்கள். அவர்கள் இவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமானால் நாம் அவர்களுடன் பணிவாக நடந்துகொள்ள வேண்டியது அவசியம் ஆகும்.

நாம் முடிந்த அளவு நம் அண்டை வீட்டார்களை நன்றாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் நாமும் அவர்களும் நல்ல தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு மகிழ்ச்சியாக வாழ முடியும்.

**ஸலிஹா இஃப்ரா**
**விரைவு**
**உயர்நிலை 2**

# நட்பின் பெருமை

நான் என்னுடைய நண்பன், ரவியோடு தினந்தோறும் பள்ளியின் நூலகத்துக்குச் சென்று பள்ளித் தேர்வுகளுக்காகப் படிப்பேன். அதனால் நாங்கள் தேர்வில் எப்போதும் அதிக மதிப்பெண்களைப் பெறுவோம். பள்ளி ஆரம்பிக்கும்முன், நாங்கள் நூலகத்துக்குச் சென்று தேர்வுகளுக்குப் படிப்போம்.

ஒரு நாள், நான் என்னுடைய பணப்பையைப் பள்ளிக்குக் கொண்டு செல்லவில்லை. நான் சோகமாக இருந்தேன். இடைவேளையின் போது, 'நான் எப்படிச் சாப்பிடப் போகிறேன்' என்று எண்ணியவாறு கவலையோடு இருந்தேன் அப்போது, ரவி தன்னுடைய பணப்பையை அவனுடைய மேசையின் மேல் வைத்துவிட்டு உணவகத்துக்குச் சென்றான். அப்போது என்னுடைய மனத்தில் ஒரு யோசனை தோன்றியது.

எனக்குப் பசியாக இருந்ததால் நான் ரவியின் பணப்பையிலிருந்து பணத்தை எடுத்தேன். 'ரவியிடம் பிறகு சொல்லிக்கொள்ளலாம்' என்று எண்ணியவாறு, பள்ளியில் இருக்கும் உணவகத்துக்குச் சென்றேன். உணவகத்தில், நான் ரவியைப் பார்த்தேன். அங்கு அவன் ஒரு புத்தகத்தைப் படித்துக்கொண்டு இருந்தான். நான் அவனிடமிருந்து எடுத்த பணத்தைக்கொண்டு உணவு வாங்கினேன். பிறகு, நான் அவனிடம் சென்று, "ரவி, நான் உன்னுடைய பணத்தை எடுத்து உணவு வாங்கினேன். ஏனென்றால் நான் என்னுடைய பணப்பையைப் இன்று பள்ளிக்குக் கொண்டு வர மறந்துவிட்டேன்." என்று சொன்னேன். ரவி அதைக் கேட்டதும் கோபமடைந்தான். "நீ ஏன் என்னைக் கேட்காமல் என்னுடைய பணத்தை எடுத்தாய்? நீ என்னுடைய பணத்தை எடுத்தது தவறு" என்று அவன் கத்தினான். திடீரென்று, அவன் உணவகத்திலிருந்து வகுப்புக்குக் கோபத்துடன் ஓடினான்.

அன்றிலிருந்து சில நாட்களுக்கு மேலாகவே ரவி என்னிடம் பேசவில்லை. நான் அவனிடம் மன்னிப்புக் கேட்டதோடு அப்பணத்தையும் திருப்பிக் கொடுத்தேன். ஆனால், அவன் இன்னும் என்மேல் மிகவும் கோபமாகவே இருந்தான். நான் அவனுடைய கோபம் ஆறவில்லை என்பதையறிந்து கோபமடைந்தேன்.

நான் என்னுடைய பெற்றோரிடம் இப்பிரச்சினையைப் பற்றிச் சொன்னேன். அதைக் கேட்ட என் பெற்றோர், என்னை ரவிக்கு ஒரு கடிதம் எழுதுமாறு சொன்னார்கள். நான் அவனுக்கு ஒரு கடிதம் எழுத முடிவு செய்தேன்.

அந்தக் கடிதத்தில் நான், மறுபடியும் ரவியிடம் மன்னிப்புக் கேட்டேன். மேலும், நான் என்னுடைய தவற்றை ஒத்துக்கொண்டேன். கடைசியாக, நான் ரவி ஒரு நல்ல நண்பன் என்று கடிதத்தில் எழுதினேன்.

அடுத்த நாள், நான் ரவியிடம் அந்தக் கடிதத்தைக் கொடுத்தேன். அவன் கடிதத்தைப் படித்தான். திடீரென்று அவன் சிரித்தான். நான் ஆச்சரியமடைந்தேன். "மாலா! நான் உன்னை மன்னித்துவிட்டேன். நீயும் ஒரு நல்ல தோழிதான். அதனால்தான் உன்னை மன்னிக்கிறேன்." என்று ரவி சொன்னான். அதைக் கேட்டு நான் மகிழ்ச்சியடைந்தேன். அன்றிலிருந்து நாங்கள் பள்ளிக்கு மீண்டும் சேர்ந்து சென்றோம். மேலும் மகிழ்ச்சியாக நூலகத்தில் இணைந்து படித்து வருகிறோம்.

**அனாமிகா**
**விரைவு**
**உயர்நிலை 2**

